11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

48. திருவாளர்கள் கிரோரிமால் காசிராம் பருப்பு வகை விற்பனையாளர் பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனைமீது செலுத்தத்தக்க மேல்வரி, கூடுதல் மேல்வரியை வசூலித்திருக்கக்கூடாது என்கிற நிபந்தனைக்குட்பட்டு 1–4–1992 முதல் 24–12–1992 வரையிலான காலத்திற்கு பட்டாணி மற்றும் பட்டாணிப் பருப்பு விற்பனை செய்ததற்கு செலுத்தத்தக்க மேல்வரி, கூடுதல் மேல்வரியினைக் குறைத்தது குறித்து, 28–6–2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அரசாணை (2டி) எண் 73–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) மற்றும் 1971 ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

49. (i) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக்கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில் பொருட்களை தமிழ்நாடு உள்ளூர் பகுதிகளுக்குள் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்மீது தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல், அத்தகைய பொருட்கள்மீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையைக் குறைப்பது குறித்தும்; (ii) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது செலுத்தத்தக்க வரியை தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக் கொண்டுவருவது குறித்து நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல், அத்தகைய பொருட்களைக் கொண்டு வந்ததுமீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையினைக் குறைப்பது குறித்தும்; (iii) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு, மாநிலத்திற்குள் அவர் தயாரித்த யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தவரையில், பொருட்களைத் தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக்

2006 செப்டம்பர் 2]

கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் தொகை எதுவும் திருப்பிக் கொடுக்காமல் அத்தகைய பொருட்கள்மீது செலுத்தப்பட்ட நுழைவு வரித் தொகையின் அளவிற்கான தொகையினைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகரும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களை/துணைப் பொருட்களைக் கொண்டு மாநிலத்திற்குள் அவர் தயாரித்த ஏதேனும் பொருட்களின் மாநிலங்களுக்கிடையேயான விற்பனை வரியில் தமிழ்நாடு உள்ளூர்ப் பகுதிகளுக்குள் பொருட்களைக் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட நுழைவு வரியை, தொகை ஏதும் திருப்பிக் கொடுக்காமல் குறைக்கப்படும் வரியின் அளவு, தயாரிக்கப்படும் அத்தகைய பொருட்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது செலுத்தத்தக்க வரியில் 50 சதவிகிதத்திற்கு மேற்படக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டும், தயாரிக்கப்படும் அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியைப் பொறுத்தவரையில் குறைக்கப்படும் வரியின் அளவு, தொகை ஏதும் திருப்பிக் கொடுக்காமல் மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியில் 100 சதவிகிதம் வரையில் இருக்க வேண்டும் என்கிற நிபந்தனைக்குட்பட்டு வரிக் குறைப்பு செய்தது குறித்தும்; (v) மாநிலத்தில் கடைசி கொள்முதல் முனையில் ஏற்கெனவே வரி விதிக்கப்பட்டுள்ள பழைய கழிவுத் தாளின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனைமீது 22–7–2006 ஆம் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் யாதொரு வணிகரும் தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், வரி ஏதும் செலுத்தத் தேவையில்லை என்றும் 22–7–2006 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (சி.1) துறையின் அரசாணை (நிலை) எண் 74-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *(2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொருட்களை உள்ளூர்ப் பகுதிகளுக்குள் கொண்டுவருவது குறித்த நுழைவு வரிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).*

50. 1999 ஆம் ஆண்டு பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (நுண்ணறிவுத் திறன் தொழில், வணிகம், சிறப்பார்வத் தொழில் மற்றும் வேலை மீதான வரி வசூலித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து 18–1–2006 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 10 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *(1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு,*

1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

51. 1996 ஆம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சிகள், நகராட்சி மன்றங்கள் மற்றும் மாநகராட்சி மன்றங்களின் (தேர்தல்) விதிகளில் திருத்தம் செய்தது குறித்து, 1–2–2006 ஆம் நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 14 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1919) 348(டி) பிரிவு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304(2) பிரிவு, 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1971) 432(2) பிரிவு, 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1981) 431(2) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1994) 11(3) பிரிவு, 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1994) 11(3) பிரிவு, மற்றும் 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1994) 11(3) பிரிவு, ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

52. 2004–2005 ஆம் ஆண்டிற்கான திருவண்ணாமலை மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

53. 2004–2005 ஆம் ஆண்டிற்கான வேலூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

54. 2004–2005 ஆம் ஆண்டிற்கான விழுப்புரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

2006 செப்டம்பர் 2]

55. 2004–2005 ஆம் ஆண்டிற்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

56. தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் உள்ள அரசு மானியம் பெறும் ஸ்ரீகிருஷ்ணா தொடக்கப் பள்ளியில் 16–7–2004 ஆம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்து காரணமாக உயிரிழப்பு ஏற்பட்ட சம்பவம் குறித்து விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திரு. கே. சம்பத் விசாரணை ஆணையத்தின் அறிக்கை. (1952 ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS